# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C 8064890

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி    PS காவல்நிலையம் : ல.ஒ.த.பிரிவு    Year ஆண்டு : 2020    FIR No. முதஅ எண் : 12/AC/2020    Date நாள் : 12.12.2020

2. (i) Act சட்டம் : ஊழல் தடுப்புச் சட்டம் 1988    Sections பிரிவுகள் : 7, 12 r/w 7

   (ii) Act சட்டம் : திருத்தியமைக்கப்பட்டது 2018.    Sections பிரிவுகள் :

   (iii) Act சட்டம் :    Sections பிரிவுகள் :

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை 12.12.2020

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை காலை 04.05 மணிக்கு பின்பு

   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் 12.12.2020 மாலை 09.00 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    தன்னிச்சையாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    60 கி.மீ மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    போக்குவரத்து துறை சோதனைச் சாவடி (வெளிவழி), ஜுஜுவாடி, ஓசூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. பெ. கிருஷ்ணராஜன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : திரு. வேட்ராயன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 48    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் : காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்.    (g) Address : முகவரி : காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், ல.ஒ.த.பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. K. பிரதாப (45), த/பெ. கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1), போக்குவரத்து துறை சோதனைச் சாவடி (வெளிவழி), ஜுஜுவாடி, ஓசூர்.

   2) திரு. P. மணி (45), த/பெ. ராமச்சந்திரன், எண். 2/158, [illegible] நகர், ஜுஜுவாடி, ஓசூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 12/12/20

Signature of the Officer in-charge/Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 12/12/20

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020 - 11.00 மணி.

Name பெயர் [illegible],
Rank நிலை No. எண் காவல் [illegible],
[illegible]. பிரிவு,
[illegible].

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குஎண்.12/AC/2020 u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் வ.எண் 12 ன் இணைப்பு.**

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நேற்று 11.12.2020 ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் பொறுப்பிலிருந்தபோது, ஓசூர் ஜூஜூவாடி வெளிவழிச் சோதனைச் சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனைச் சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் விதிமீறல்கள்மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கவும், நடைசீட்டுகளில் முத்திரை பதிக்கவும் வாகன ஓட்டிகளிடமிருந்தும் உரிமையாளர்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாட்சியர் அலுவலக மண்டல துணை வட்டாட்சியர் திரு.கே.சுரேந்திரன் மற்றும் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பெ.செல்வராஜ் மற்றும் காவலர்கள் குழுவினருடன் புறப்பட்டு இன்று அதிகாலை 04.05 மணிக்கு அந்த சோதனைச் சாவடியை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அப்போது மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு, அந்த அலுவலக உதவியாளர் திருமதி கே.தமிழ்செல்வி, தனிநபர்களான திரு.ஏ.சீனிவாசன் மற்றும் திரு.பி.மணி ஆகியோர்கள் இருந்தனர். அவர்களிடம் நான் என்னையும் அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விவரத்தை சொன்னேன். பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களிடம் இன்றைய தினம் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் வசூல் செய்யப்பட்ட தொகையின் விவரம் குறித்து கேட்டேன். அப்போது அவர் அந்த அலுவலகத்தின் மேற்கு பக்கம் கிழக்கு முகம் பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்த தனிநபரான திரு.ஏ.சீனிவாசன் அவர்களின் இருக்கைக்கு அழைத்துச் சென்றார். அந்த நபரைப் பற்றி நான் விசாரிக்க, தான் தனி நபர் என்றும், அந்த இருக்கையின் உதவியாளர் பணியிடம் காலியாக இருப்பதால், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த இருக்கையை தான் கவனித்து வருவதாகவும் அதற்காக மோட்டார வாகன ஆய்வாளரகள் தனக்கு தினக்கூலியாக ரூ.600/- தருகிறார்கள் என்றும் தெரிவித்தார். 11.012.2020 தேதி காலை 08.00 மணி முதல் தணிக்கை நேரம்

வரையில் அரசு கணக்கில் மொ த்தம் ரூ.1,07,380/- வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். அந்த பணம் கையிருப்பு பணத்தோடு சரிபார்க்கப்பட்டபோது சரியாக இருந்தது. அந்த பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களிடம் அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டு உரிய நேரத்தில் அரசு கணக்கில் இருசால் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களின் இருக்கைக்கு நேர் எதிரில் ஜன்னல் ஓரத்தில் நின்று கொண்டு வாகனங்களின் நடை சீட்டுகளில் முத்திரை பதித்துக் கொண்டிருந்த திரு.பி.மணி அவர்களிடம் நான் விசாரிக்க, அவர் அந்த வேலையை செய்து தருவதற்காக மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அவருக்கு தினக்கூலியாக ரூ.700/- தருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று நான் கேட்டபோது, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய பேணடின் இடது பாக்கட்டிலிருந்து ரூ.5500 எடுத்து ஆஜர் செய்து, நடைசீட்டுகளில் முத்திரை பதித்தற்காக வாகன ஓட்டிகள் கையூட்டாக கொடுத்த பணம் என்றும், அவ்வப்போது மோட்டார வாகன ஆய்வாளரிடம் அந்த பணம் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். அது கையூட்டு பணம் என்பதால் அந்த பணம் ரூ.5500/- என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு அவர் முத்திரை பதித்துக் கொ ண்டிருந்த மேசையை சந்தேகத்தின் அடிப்படையில் தணிக்கை செய்தபோது ஸ்ரீ வாரகி பைரவர் திருக்கல்யாணம் என்ற பத்திரிக்கையின் நடுப்பகுதியில் பணம் ரூ.33,600/- மறைத்து வைக்கப்பட்டிருந்தது . அந்த பணம் குறித்து திரு.பி.மணி அவர்களிடம் கேட்க, அந்த பணமும் நடை சீட்டுகளில் முத்திரை பதிக்க வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெறப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே அந்த பணம் அந்த பத்திரிக்கையுடன் அப்போது என்னால் தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் சந்தேகத்தின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களின் இருக்கை தணிக்கை செய்யப்பட்டதில் அவருடைய மேஜையின் வலது முதல் டிராயரில் பணம் ரூ.61,000/- வைக்கப்பட்டிருந்தது . அந்த பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களிடம் விளக்கம் கேட்க, ஆம்னி பஸ்ஸுகுண்டான வரிப்பணம் என்று தெரிவித்தார். ஆனால் அதற்குண்டான ஆவணங்களை அவரால் ஆஜர்படுத்த முடியவில்லை. எனவே அந்த பணமும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம்

இருந்ததால் அந்த பணம் ரூ.61,000/- என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு சந்தேகத்தின் அடிப்படையில் கிழக்கு பாக அறையில் வடமேற்கு மூலையில் வைக்கப்பட்டிருந்த ஸ்டேசனரி பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இரும்பு பீரோவில் மூன்றாவது தட்டில் பணம் ரூ.75,000 வைக்கப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களிடம் விளக்கம் கேட்க, அது பற்றி தனக்குத் தெரியாது என்று தெரிவித்தார். எனவே அந்த பணமும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.75,000/- என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு அந்த அறையில் மத்திய பகுதியில் ஒரு பிளாஸ்டிக் நாற்காலியின் மீது வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களுக்கு சொந்தமான சிவப்பு நிற டிராவலஸ் பேக்கிற்குள் பணம் ரூ.9000/- வைக்கப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் எப்படி அங்கு வந்தது என்று தனக்குத் தெரியாது என்றும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் அந்த பணமும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததாலும் அந்த பணம் ரூ.9,000/- என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலக வருகைப்பதிவேடு, அலுவலர்களின் பணம் குறித்த பதிவேடு, ராக்கப்பதிவேடு, 1 சதவீத வரிப்பதிவேடு, வாகன நடமாட்ட பதிவேடு ஆகிய பதிவேடுகள் என்னால் பார்வையிடப்பட்டு அந்த ஆவணங்களின் 11.12.2020 தேதிக்குண்டான பக்கங்கங்கள் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு அவற்றில் மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களின் கையொப்பம் பெறப்பட்டது. அந்த ஆவணங்கள் மேல் விசாரணைக்காக என்னால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக 12.12.2020 ஆம் தேதி அதிகாலை 05.00 மணிமுதல் காலை 07.45 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதில் நானும் அரசு சாடசிகளும் கையொப்பம் செய்தோம். அதன் நகல் ஒன்றை மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு மற்றும் திரு பி. மணி அவர்களுக்கும் இலவசமாக வழங்கி அதில்

அவர்களுடைய ஒப்புதல் பெறப்பப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களின் செயல்பாடுகளானது, அவர் ஒரு பொது ஊழியராக இருந்து கொண்டு தனது கடமையை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்வதற்கோ அல்லது செய்யாமலிருக்கவோ தனி நபரான திரு பி.மணி அவர்களின் மூலமாக வாகன ஓட்டிகளிடமிருந்து பணத்தை தகாத அனுகூலமாக பெற்றுள்ளார். தனி நபரான திரு பி.மணி அவர்கள் வாகன ஓட்டிகளிடமிருந்து பணத்தை தகாத அனுகூலமாக பெற்று அதை பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்களுக்கு கொடுக்க அவருக்கு உள்நோக்குடன் துணைபுரிந்துள்ளார். ஆகவே இன்று 12.12.2020 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலகம் வந்து கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 12/AC/2020 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன்படி மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.என்.ரமேஷ் பாபு அவர்கள் மீதும் u/s 12 r/w 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன்படி திரு.பி.மணி அவர்கள் மீதும் முதல் தகவலறிக்கை பதிவு செய்து முதல் தகவலறிக்கையின் அசலையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் படிவம் 91 ன் மூலமாகவும் கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

12/12/20
Dy. Supdt. of Police,
Krishnagiri V & AC.

Scanned with CamScanner